FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348048

1. District : Dharmapuri PS: V & AC Year: 2026 FIR No.: 02/AC/2026 Date: 01.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018. Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.06.2026 Date to : 29.06.2026 at 15.40 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் at 11.30 hrs நாள் வரை 30.06.2026 at 11.45 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 01.07.2026 Time : 06.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 15 H 9925967 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Oral
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Village Administrative officer, Veppampatti,
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Nearby O/o the Village Administrative officer, Eattiyampatty and at the land of the complainant.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : About 50 kms east.
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Murugan (b) Father's/ Husband's Name : Tr. Kutta Velli Gounder
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 61/2026 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Farmer & Driver (g) Address.: Veppampatty village & POST, Harur Taluk, Dharmapuri District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Raja, Village Administrative officer, Veppampatty Revenue Village, Harur Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

-2-

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank .....to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Dharmapuri 01.07.26

01/07/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.07.2026 at 09.55 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, No. எண்
VAC, DHARMAPURI

தருமபுரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/AC/2026 u/s 7(a) of the Prevention of Corruption Act,1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் காலம்–12–ன் தொடர்ச்சி

இன்று 01.07.2026–ந்தேதி காலை 06.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்திலிருந்தபோது, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி அஞ்சல், வேப்பம்பட்டி கிராமத்தை சேர்ந்த குட்ட வெள்ளை கவுண்டர் மகன் திரு. K.முருகன் என்பவர் அலுவலகம் ஆஜராகி கொடுத்த வாய்மொழி புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேப்பம்பட்டி அஞ்சல், வேப்பம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் மற்றும் டிரைவர் வேலை செய்துவருகிறேன். நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் படிக்க தெரியும், ஆனால் எழுத தெரியாது, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கையொப்பம் மட்டும் போடுவேன். எனக்கு வேப்பம்பட்டி கிராமத்தில் சுமார் 1 ஏக்கர் 22 சென்ட் விவசாய நிலம் இருந்தது. எனது மனைவி கவிதாவின் எதிர்கால நலன் கருதி அவரது பெயருக்கு 37 சென்ட் நிலத்தை கடந்த 21.05.2026 ஆம் தேதி அரூர் ரிஜிஸ்டர் ஆபிசில் தான பத்திரம் ஆவண எண்.3176/2026 மூலம் பதிவு செய்து கொடுத்தேன். பிற்கு 06.06.2026 ஆம் தேதி காலை சுமார் 07.22 மணிக்கு 6382023461 என்ற செல் நெம்பரில் இருந்து எனது செல் நெம்பர் 9442324319–க்கு ஒருவர் போன் செய்து தான் வேப்பம்பட்டி VAO ராஜா என்றும், உன்னுடைய மனைவி கவிதா பெயரில் பட்டா மாற்றம் செய்ய அரூர் ரிஜிஸ்டர் ஆபிசில் இருந்து மனு வந்துள்ளது என்றும், உங்களது நிலத்தை அளக்க ஒரு நாள் வருகிறேன் என்றும் என்னிடம் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார். பிறகு நான் அன்று காலை சுமார் 07.55 மணிக்கு VAO ராஜா அவர்களுக்கு போன் செய்து நிலத்தை அளக்க எப்போது வருவீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் தான் வரும்போது போன் செய்கிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்பிறகு அவர் எனக்கு போன் செய்யவில்லை. இந்நிலையில், நான் ஏற்கனவே எனது மனைவிக்கு தானமாக எழுதிக்கொடுத்த 37 சென்ட் நிலத்தில் 7 சென்ட் நிலம் போக மீதி 30 சென்ட் நிலத்தை உங்களுக்கே எழுதிக்கொடுத்து விடுகிறேன் என்று எனது மனைவி என்னிடம் சொன்னார். அதன்படி 16.06.2026 ஆம் தேதி எனது மனைவி 30 சென்ட் நிலத்தை எனது பெயரில் அரூர் ரிஜிஸ்டர் ஆபிஸ் தான பத்திரம் ஆவண எண்.3884/2026 மூலம் பதிவு செய்து கொடுத்தார். பின்னர் நான் 23.06.2026 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு வேப்பம்பட்டி VAO ராஜா அவர்களை அவரது ஆபிஸில் சந்தித்து ஆவண எண்.3884/2026–ன் நகலையும் மற்றும் ஆவண எண்.3176/2026–ன் முதல் பக்க நகலையும் அவரிடம் கொடுத்து எனக்கும், எனது மனைவிக்கும் தனிபட்டா வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் என்னிடம், இருவருக்கு தனிபட்டா வழங்க தனக்கு ரூ.10,000/– தரவேண்டும் என்றும், தற்போது எவ்வளவு பணம் வைத்துள்ளாய் என்றும் கேட்டார். அதற்கு

நான் ரூ.1,000/– வைத்துள்ளதாக சொன்னேன். அப்போது அவர் சரி அந்த ரூ.1,000/– கொடு என்று கேட்டு வாங்கிக்கொண்டு மீதி ரூ.9,000/– பணத்தை கொடுத்தால் தான் தனிப்பட்டா வழங்க ஏற்பாடு செய்யமுடியும் என்றும், இப்போதே உங்கள்து நிலத்தை அளந்துவிடுகிறேன் என்று என்னிடம் கூறி எனது நிலத்திற்கு அவரை அழைத்து கொண்டு போக சொன்னார். நானும் அவர் சொன்னவாறு அவரை எனது டூவீலரில் அழைத்து கொண்டு எனது நிலத்திற்கு சென்றேன். அங்கு வைத்து அவர் என்னிடம் டேப்பை பிடிக்க சொல்லி எங்களது நிலத்தை அளந்தார். பிறகு VAO ராஜா அவர்களை அவரது ஆபிசில் விட்டுவிட்டேன். பின்னர் 29.06.2026 ஆம் தேதி மதியம் 02.08 மணிக்கு VAO ராஜா அவர்கள் எனக்கு போன் செய்து வேப்பம்பட்டி VAO ஆபிசிற்கு வருமாறு சொன்னார். அப்போது நான் அரூரில் இருந்ததால் அவரிடம் ஒரு மணி நேரத்தில் ஆபிசிற்கு வந்துவிடுகிறேன் என்று சொன்னேன். பிறகு அன்று சாயங்காலம் 03.15 மணிக்கு நான் வேப்பம்பட்டி VAO ஆபிசிற்கு சென்று பார்த்தபோது VAO ராஜா அவர்கள் ஆபிசில் இல்லாததால், எனது மற்றொரு செல் நெம்பர் 9344010589–ல் இருந்து VAO ராஜா அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது அவர் தான் வெலாம்பட்டியில் இருந்து ஈட்டியம்பட்டி VAO ஆபிசிற்கு சென்று கொண்டிருப்பதாகவும், அங்கு வந்துவிடுமாறும் என்னிடம் சொன்னார். நானும் அதன்படி ஈட்டியம்பட்டி VAO ஆபிசிற்கு சென்றேன். அங்கு VAO ராஜா அவர்கள் இல்லாததால் சாயங்காலம் 03.22 மணிக்கு VAO ராஜா அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது அவர் 5 நிமிசத்தில் ஈட்டியம்பட்டி VAO ஆபிசிற்கு வந்துவிடுவேன் என்றும் என்னை அங்கேயே இருக்குமாறும் சொன்னார். அதன்படி நானும் அங்கேயே காத்திருந்தேன். பின்னர் சாயங்காலம் 03.40 மணிக்கு VAO ராஜா அவர்கள் ஈட்டியம்பட்டி VAO ஆபிசிற்கு அருகில் வந்து என்னிடம், மீதி பணம் ரூ.9,000/– எப்போது கொடுப்பாய் என்று கேட்டார். அதற்கு நான் சார் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது கொஞ்சம் குறைத்து சொல்லுங்கள் என்று கேட்டேன், அதற்கு அவர் உனக்கும், உனது மனைவிக்கும் தனிப்பட்டா வழங்க சர்வேயர் பரிந்துரை பெறவேண்டும் என்றும், கூடுதலாக செலவாகும் என்றும், அதனால் தான் கேட்ட பணம் ரூ.9,000/–த்தை கொடுத்து வேலையை முடித்து கொள் என்றும் நாளை தன்னை தனது ஆபிசில் சந்திக்குமாறும் என்னிடம் சொல்லி விட்டு சென்றுவிட்டார். அவர்சொன்னவாறு நான் நேற்று 30.06.2026 ஆம் தேதி காலை சுமார் 11.15 மணிக்கு VAO ராஜா அவர்களை அவரது வேப்பம்பட்டி ஆபிசில் சந்தித்தேன். அப்போது அவர் என்னை ஆபிசிற்கு வெளியே கொஞ்சம் நேரம் காத்திருக்குமாறு சொன்னார். நானும் காத்திருந்தேன். பிறகு சுமார் 11.30 மணிக்கு VAO ராஜா என்னிடம், உங்களது நிலத்தை மீண்டும் அளக்க வேண்டும் என்று கூறி என்னை எனது நிலத்திற்கு அழைத்து கொண்டு போனார், அங்கு VAO ராஜா அவர்கள் மீண்டும் எங்களது நிலத்தை என் உதவியுடன் சுமார் 11.45 மணிக்கு அளந்து முடித்தவுடன் என்னிடம், உனக்கும், உனது மனைவிக்கும் தனித்தனியாக பட்டா வழங்க ஒரு பட்டாவிற்கு தலா ரூ.4,000/– வீதம் மொத்தம் ரூ.8,000/–த்தை நாளை அவரது ஆபிசில் சந்தித்து அவரிடம் கொடுத்து விடுமாறும், தான் உடனே சர்வேயருக்கு பைலை அனுப்பிவிடுகிறேன்

என்றும் சொன்னார். ஆனால், எனக்கு VAO ராஜா அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.8,000/–த்தை கொடுத்து தனிபட்டா வாங்க விருப்பமில்லை. எனவே இன்று 01.07.2026 தேதி அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.8,000/–த்துடன் சென்று அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். படித்து பார்த்தேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. ஒப்பம் K.MURUGAN,01.07.2026. Madam, the above statement was recorded by me in the office laptop on 01.07.2026 between 06:30 hrs and 07:15 hrs and read over to him which was admitted to be correct and the informant produced a voice recording device while lodging oral complaint. The relevant portion of voice file was downloaded from the device to the office computer, heard them carefully and it clearly makes out prima facie offence against Tr.Raja, Village Administrative officer, Veppampatti Revenue Village, Harur Taluk, Dharmapuri District. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his oral complaint is genuine. After having obtained oral concurrence of the Superintendent of Western Range, DVAC a case in Dharmapuri V&AC, Cr.No.02/AC/2026, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 on 01.07.2026 at 07.45 hrs, Then the above voice file was copied from the office computer into a DVD. The voice recording device is returned to the informant as requested by him.

The original FIR and the oral complaint of the informant with above DVD along with a certification under section 63(4) of BSA 2023, were sent to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

01/07/2026

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.